**சுருக்கம்**


நிலம் – வீட்டுமனை ஒப்படை – அரசு நிலங்களில் வீடுகள் கட்டி குடியிருப்போரின் ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்து வீட்டுமனைப்பட்டா வழங்கும் சிறப்புத் திட்டம் 30.09.2011 உடன் முடிவடைந்தது – மேலும் ஓராண்டு காலத்திற்கு 30.09.2012 வரை நீட்டிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.


---

**வருவாய் [நி.மு–1(2)] துறை**

**அரசாணை (நிலை) எண்: 172** **நாள்: 23.05.2012**

**படிக்கவும்**

1. அரசாணை (நிலை) எண்: 854, வருவாய்த்துறை, நாள்: 30.12.2006.
2. அரசாணை (நிலை) எண்: 498, வருவாய்த்துறை, நாள்: 05.09.2007.
3. அரசாணை (2டி) எண்: 711, வருவாய்த்துறை, நாள்: 30.11.2007.
4. அரசாணை (நிலை) எண்: 34, வருவாய்த்துறை, நாள்: 23.01.2008.
5. அரசாணை (நிலை) எண்: 241, வருவாய்த்துறை, நாள்: 09.05.2008.
6. அரசாணை (நிலை) எண்: 579, வருவாய்த்துறை, நாள்: 03.10.2008.
7. அரசாணை ((நிலை) எண்: 366, வருவாய்த்துறை, நாள்: 08.10.2009.
8. அரசாணை (நிலை) எண்: 43, வருவாய்த்துறை, நாள்: 29.01.2010.
9. அரசாணை (நிலை) எண்: 482, வருவாய்த்துறை, நாள்: 28.09.2010.
10. முதன்மைச் செயலாளர்/நிலநிருவாக ஆணையர் கடித எண்: எப்1/24458/2011, நாள்: 22.02.2012 மற்றும் 30.04.2012.

*******

**ஆணை:–**

அரசு புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டி குடியிருப்போருக்கு, அவர்களது ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்து, வீட்டுமனைப்பட்டா வழங்கும் சிறப்புத் திட்டம் பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்டது. இச்சிறப்பு திட்டத்தின் கீழ், அரசு புறம்போக்கு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களை சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அக்குடியிருப்புகளை புலத் தணிக்கை செய்து, உள்ளாட்சி மன்றங்களின் தீர்மானங்களைப் பெற்று, அந்நிலங்கள் அரசுக்கு தேவையில்லை எனில் வீட்டுமனைப் பட்டா வழங்கி வரன்முறைப்படுத்த ஆணையிடப்பட்டது. இதற்கென செயல்பாட்டிலிருந்த பல தடையாணைகள் தளர்வு செய்யப்பட்டன.

2. இத்திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்தும் பொருட்டு, பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் மாவட்ட ஆட்சியர்களுக்கு சில அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. மேலும் பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் இலவச

ஒப்படை பெறுவதற்கான வருமான உச்சவரம்பு நீக்கப்பட்டும், ஊரகப் பகுதிகளில் 3 சென்ட், நகராட்சிப் பகுதிகளில் 1½ சென்ட் மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் 1 சென்ட் என்று இருந்த வரம்பை இத்திட்டத்திற்கு மட்டும் உயர்த்தி, ஊரகப் பகுதிகளில் 4 சென்ட், நகராட்சி பகுதிகளில் 2½ சென்ட் மற்றும் மாநகராட்சி பகுதிகளில் 2 சென்ட் என்கிற அளவில் வீட்டுமனைப்பட்டா வழங்கப்படும் என்றும், இத்திட்டத்தின் கீழ் முன்னதாக நிலக்கிரயம் செலுத்தி வீட்டுமனைப் பட்டா பெற்றவர்களுக்கு அவர்கள் செலுத்திய தொகை, உரிய ஆய்விற்குப் பின்னர், அவர்களுக்கு திரும்பவும் வழங்கப்படும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

3. பார்வை நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில், இத்திட்டம் அரசு நிலங்களில் ஐந்தாண்டுகளுக்கு மேல் வீடுகட்டி குடியிருப்பவர்களுக்கும் பொருந்தும் என ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் அரசு புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டி குடியிருப்போரின் குடியிருப்பு கால வரம்பை ஐந்தாண்டு காலமாக உள்ளதை மூன்று ஆண்டுகளாக குறைத்து பார்வை எட்டில் படிக்கப்பட்ட அரசாணையில் அரசு ஆணையிட்டது. மேலும், இத்திட்டத்தின் கீழ் அதிகளவில் பயனாளிகள் பயன் அடைய வேண்டும் என்பதற்காகவும், மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளிலுள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தவும் இத்திட்டம் பலமுறை நீட்டிக்கப்பட்டு மீண்டும் பார்வை ஏழில் படிக்கப்பட்ட அரசாணையில் 30.9.2010 வரை நீட்டிக்கப்பட்டது.

4. இச்சூழ்நிலையில், சிவகாசி பகுதி வரிச் செலுத்துவோர் சங்கம் தொடர்ந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை எண்.18485/10–இல், பார்வை எட்டில் படிக்கப்பட்ட அரசாணையில் குடியிருப்பு கால வரம்பை ஐந்தாண்டு காலத்திலிருந்து மூன்று ஆண்டுகளாக குறைத்து வெளியிட்ட அரசாணையை இந்த வழக்கு விசாரணை முடியும் வரை செயல்படுத்தக் கூடாது என உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவினை ரத்து செய்வதற்கு தனியாக அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அரசின் இலவச வீட்டுமனை வழங்கும் ஒரு முறை சிறப்புத் திட்டத்தின் கீழ் விடுபட்டுள்ள ஏழை எளிய மக்கள் பயன் அடையும் பொருட்டு அரசு நிலங்களில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் வீடுகள் கட்டி குடியிருந்து வருபவர்களின் ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்து வீட்டுமனைப் பட்டா வழங்கும் இந்த ஒரு முறை சிறப்புத் திட்டத்தினை 1.10.2010 முதல் மேலும் ஓர் ஆண்டு காலத்திற்கு அதாவது 30.9.2011 வரை நீட்டிப்பு செய்து பார்வை ஒன்பதில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. பார்வை பத்தில் படிக்கப்பட்ட கடிதங்களில் முதன்மைச் செயலர் மற்றும் நில நிருவாக ஆணையர் அரசு நிலங்களில் வீடு கட்டி குடியிருந்துவரும் நபர்களின் ஆக்கிரமிப்பினை வரன்முறைப்படுத்த அதிக நேர்வுகள்/ இனங்கள் உள்ளன என்றும் (Many number of cases are on hand for regularisation) தெரிவித்து 30.09.2011–க்கு பிறகு அரசு நிலங்களில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் வீடுகள் கட்டி குடியிருந்து வருபவர்களின் ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்து வீட்டுமனைப் பட்டா வழங்கும் இந்த ஒரு முறை சிறப்புத் திட்டத்தினை 1.10.2011 முதல் மேலும் ஓர் ஆண்டு காலத்திற்கு அரசு விருப்பப்படின் அதாவது 30.9.2012 வரை நீட்டிப்பு செய்து ஆணை வெளியிடுமாறு பரிந்துரைத்துள்ளார்.

6. மேற்படி முதன்மைச் செயலாளர்/நிலநிருவாக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு நன்கு ஆய்வு செய்து அவரின் கருத்தினை ஏற்று. அரசின் இலவச வீட்டுமனை வழங்கும் ஒரு முறை சிறப்புத் திட்டத்தின் கீழ் விடுபட்டுள்ள ஏழை எளிய மக்கள் பயன் அடையும் பொருட்டு அரசு நிலங்களில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் வீடுகள் கட்டி

குடியிருந்து வருபவர்களின் ஆக்கிரமிப்புகளை வரன்முறைபடுத்த அதிக நேர்வுகள் உள்ளதன் அடிப்படையில் இந்த வீட்டுமனைப் பட்டா வழங்கும் ஒரு முறை சிறப்புத் திட்டத்தினை **01.10.2011** முதல் மேலும் ஒராண்டு காலத்திற்கு அதாவது **30.09.2012** வரை நீட்டிப்பு செய்து அரசு இவண் ஆணையிடுகிறது.

7. இந்த அரசாணையின்படி உரிய நடவடிக்கை எடுக்குமாறு முதன்மைச் செயலாளர்/நிலநிருவாக ஆணையர் மற்றும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ரமேஷ்ராம் மிஸ்ரா
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**
முதன்மைச் செயலாளர்/நிலநிருவாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
அணைத்து மாவடட ஆட்சித்தலைவர்கள்.
**நகல்**
அனைத்து துறை செயலாளர்கள், சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (வருவாய்) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
வருவாய்த்துறை, முதன்மைச் செயலரின் நேர்முக உதவிாயர், சென்னை–9.
இ.கோ/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.